**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருத்தணி.**

**முன்னிலை:- திருமதி R.D. குருலட்சுமி,** M.A.,M.L., PGDI & CL.,

மாவட்ட உரிமையியல் நீதிபதி, திருத்தணி.

திருவள்ளுவராண்டு 2055 குரோதி வருடம் மார்கழி திங்கள் 23-ம் நாள்

2025 ம் ஆண்டு ஜனவரி திங்கள் 7 ஆம் நாள் செவ்வாய்கிழமை

இடைநிலை மனு எண்.6/2023

இன்

அசல் வழக்கு எண்.48/2023

(CNR.No.TNTR21-000051-2023)

...

V. மனோகரன் ... மனுதாரர்/வாதி

/எதிர்/

R. விஜயன் ... எதிர்மனுதாரர்/ 1ம் பிரதிவாதி

இம்மனு கடந்த 19.12.2024 ஆம் தேதி என் முன்னர் இறுதி விசாரணைக்கு வந்தபோது மனுதாரர்/வாதி தரப்பில் வழக்கறிஞர்கள் திருவாளர்கள் J. சூரி, B.அகிலாகுமாரி சூரி, R.லதா, M. குமாரி ஆகியோர்கள் முன்னிலையாகியும், எதிர்மனுதாரர்/1ம் பிரதிவாதி தரப்பில் வழக்கறிஞர்கள் திருவாளர்கள் P.S.பார்த்தசாரதி, K.V. ரவி ஆகியோர்கள் முன்னிலையாகியும், இருதரப்பு வாதங்களைக் கேட்டும், இருதரப்பு வழக்காவணங்களைப் பரிசீலனை செய்தும், இந்நாள் வரை நிலுவையில் இருந்த இம்மனுவில் இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்,

**உத்தரவு**

மனுச் சொத்தில் மனுதாரரின் அமைதியான அனுபவத்தினை எதிர்மனுதாரர்/1ம் பிரதிவாதியோ அவர்வகையாட்களோ இவ்வழக்கு முடியும்வரை இடைஞ்சல் செய்யக் கூடாது என இடைக்கால உறுத்துக் கட்டளை பரிகாரம் கோரி மனுதாரரால் உரிமையியல் நடைமுறைச் சட்டம் கட்டளை 39 விதி 1, 2-ன் கீழ் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

1. **மனுவின் சுருக்கம்:-**

(அ) வழக்குசொத்துக்கள் கிராம நத்தம் ஆகும். 1947 முதல் மனுதாரரின் தகப்பனார் வேலாயுதம் கிராம நத்தத்தை ஆக்கிரமிப்பு செய்து வீடு கட்டி அவரது பாத்தியத்தில் வைத்து குடும்பத்துடன் அனுபவித்து வந்தார். வேலாயுதத்திற்கு மூன்று மகன்கள் இரண்டு மகள்கள். அவர்கள் லோகநாதன், மனோகரன், பாலகிருஷ்ணன், விசாலாட்சி, வசந்தா ஆகியோர்கள் ஆவார்கள். மனுதாரரின் தகப்பனார் சில சொத்துக்களை 02.10.1947 ல் ஆவண எண்.2950/1947 ன்படி கிரையம் வாங்கி மேற்படி சொத்துக்களை எந்த இடைஞ்சலுமின்றி அனுபவம் செய்து வந்தார். 3 வது மகனான பாலகிருஷ்ணன் அவரது மனைவி லோகம்மாள் மனுதாரருக்கிடையே சில மன கஷ்டம் ஏற்பட்டு சொத்து பிரச்சனை ஏற்பட்டது.

எனவே மனுதாரரும் அவரது சகோதரர் லோகநாதனும் சேர்ந்து திருத்தணி சார்பு நீதிமன்றத்தில் பாலகிருஷ்ணன், அவரது மனைவி மக்களுக்கு எதிராக அசல் வழக்கு 434/1991 ஐ தாக்கல் செய்து அந்த வழக்கு நிலுவையில் இருந்தபோது மனுதாரரின் தகப்பனார் வேலாயுதம் 05.10.1994 ல் அவரது மனைவி மூன்று மகன்கள் 2 மகள்களை வாரிசுகளாக விட்டுவிட்டு இறந்துவிட்டார்.

(ஆ) வேலாயுதம் அவரது மகன் லோகநாதன், மனுதாரர் மற்றும் பாலகிருஷ்ணன் ஆகியோர்கள் அசல் வழக்கு 434/1991 ஐ 17.03.1998 ம் நீதிமன்றத்திற்கு வெளியே தீர்த்துக் கொள்வதாக திரும்ப பெற்றதால் மேற்படி அசல் வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டது. வேறு எந்த நீதிமன்றத்திலும் வழக்கு சொத்துக்களை பொறுத்து உரிமையியல் வழக்கு நிலுவையில் இல்லை. அதன்பின்பு சகோதரர்கள் வாய்மொழியாக அவர்களுக்குள் பாகம் பிரித்துக்கொண்டனர். அதில் வழக்கு சொத்துக்களும் வேறு சில சொத்துக்களும் மனுதாரருக்கு ஒதுக்கப்பட்டது. அத்துடன் மனுதாரரும் அவரது தாயார் காமாட்சியம்மாள் மற்றும் மனுதாரிான் குடும்பமும் வழக்கு சொத்திலும் இதர சொத்துக்களிலும் எந்த இடையூறுமின்றி வாழ்ந்து வந்தனர்.

(இ) கடந்த 2004 ல் 3 ம் பிரதிவாதி, மனுதாரரரின் தாயார் காமாட்சியம்மாள் பெயருக்கு ந.க.எண்.12158/2004 ல் 13.12.20004 தேதியில் வழக்கு சொத்தான புல எண்.32/21 க்கு பட்டா கொடுத்தார். அதன்படி வரி செலுத்தி அனுபவித்து வரப்பட்டது. 1 ம் பிரதிவாதி வழக்கு சொத்திற்கு அருகிலுள்ள புல எண்.32/19 ன் உரிமையாளர் ஆவார். புல எண்.32/20, 32/21 மனுதாரரின் சொந்த சொத்துக்கள் ஆகும். 29.03.2006 ம் தேதி 1 ம் பிரதிவாதி அவரது மனைவி சாந்திக்கு ஆவண எண்.989/2006 ஐ எழுதி வைத்தார். எனவே 1 ம் பிரதிவாதிக்கு வழக்கு சொத்திற்கு அருகில் எந்த சொத்தும் இல்லை. 1 ம் பிரதிவாதிக்கு புல எண்.32/14A என ஒரு சொத்து உள்ளது. அது வழக்கு சொத்திலிருந்து தள்ளியுள்ளது. 1 ம் பிரதிவாதியும் அவரது குடும்ப உறுப்பினர்களும் மேற்படி சொத்தை நாகரத்தினம் என்பருக்கு 15.06.1994 ல் ஆவண எண்.1644/1994 ன்படி கிரையம் கொடுத்துவிட்டனர்.

(ஈ) 1 ம் பிரதிவாதிக்கும், வழக்கு சொத்துக்கும் எந்த சம்மந்தமும் இல்லை. எந்த சம்மந்தமுமில்லாத 1 ம் பிரதிவாதியும் அவரது மனைவியும் வழக்கு சொத்தை ஆக்கிரமிப்பு செய்ய பலமுறை முயற்சித்தனர். அதை மனுதாரர் மிகுந்த சிரமத்துடன் தடுத்துவிட்டார். 23.12.2021 ம் தேதி நில அளவையர், கிராம நிர்வாக அதிகாரி அவரது உதவியாளர் ஆகியோர் வழக்கு சொத்திற்கு வந்து அளந்து எல்லைகற்களை, 1 ம் பிரதிவாதி அவரது மனைவி முன்னிலையில் நட்டுள்ளனர். அந்த சமயம் 1 ம் பிரதிவாதியும் அவரது மனைவியும் அமைதியாக இருந்துவிட்டு மறுநாள் 24.12.2021 ம் தேதியிட்டு 1 ம் பிரதிவாதியும் அவரது மனைவியும் வழக்கு சொத்திற்கு வந்து மனுதாரரையும் அவரது மனைவியையும் கெட்ட வார்த்தைகளால் திட்டி அடித்துள்ளனர். இதுதொடர்பாக மனுதாரரின் மனைவி திருத்தணி காவல் நிலையத்தில் 24.12.2021 ம் தேதியிட்டு புகார் அளித்தார்.

ஆனால் 1ம் பிரதிவாதி மற்றும் அவரது மனைவிக்கு எதிராக எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. அதற்கு மாறாக மனுதாரரும் அவரது மனைவியும் கொடுத்த புகாரை திரும்ப பெற வேண்டும் என்றும், திரும்ப பெறவிட்டால் மனுதாரர் மற்றும் மனுதாரரின் மனைவிமீது பொய் வழக்கு பதிவு செய்யப்படும் என்று கூறினர். எனவே மனுதாரரின் மனைவி புகாரை திரும்ப பெற்றார்.

(உ) 1ம் பிரதிவாதி காவல்துறையிலும், அரசியலிலும் செல்வாக்குடையவர். அவர் சட்டத்தை மதிக்காதவர். 02.03.2020ம் தேதி மனுதாரர் வட்டாட்சியரிடம் புகார் கொடுத்தார். மனுதாரர் வட்டாட்சியரிடம் காமாட்சியம்மாள் பெயரில் இருந்த பட்டா தொலைந்து விட்டதாகவும், எனவே பட்டா வழங்குமாறு கேட்டு மனு கொடுத்தார். 3ம் பிரதிவாதி பட்டா வழங்கவில்லை. எனவே, 21.03.2020ம் தேதியிட்டு திருவள்ளூர் மாவட்ட ஆட்சியரான 4ம் பிரதிவாதியிடம் காமாட்சியம்மாள் பெயரிலிருந்த தொலைந்து போன பட்டாவை கேட்டு மனு கொடுத்தார். 4ம் பிரதிவாதி மனுவை பெற்றுக்கொண்டு இதுவரை பட்டா வழங்கவில்லை.

(ஊ) 1ம் பிரதிவாதி வழக்கமாக வழக்கு சொத்திற்கு வந்து மனுதாரரையும் மனுதாரரின் குடும்பத்தையும் மிரட்டி வழக்கு சொத்தை அபகரிக்க நினைக்கிறார். இதனால் மனுதாரருக்கு மிகவும் மனஉளைச்சல் ஏற்பட்டுள்ளது. எனவே 10.06.2022ம் தேதியிட்டு திருவள்ளூர் மாவட்ட காவல்துறை கண்காணிப்பாளரிடம் 1ம் பிரதிவாதிக்கு எதிராக நடவடிக்கை எடுக்க புகார் கொடுத்தார். அதன் நகல் இதர காவல்துறை அதிகாரிகளுக்கு அனுப்பப்பட்டது. மேல்நடவடிக்கைக்காக அனுப்பப்பட்டதன் அடிப்படையில் திருத்தணி காவல்துறை விசாரணை செய்து நீதிமன்றத்தில் பரிகாரம் கோர கூறினர்.

(எ) 31.10.2022ம் தேதி 2ம் பிரதிவாதி, 3ம் பிரதிவாதிக்கு அனுப்பிய ந.க.எண்.2698/2022/A2 தேதி 31.10.2022ம் தேதியிட்ட கடிதத்தில் மனுதாரர் உரிய ஆவணங்கள் சமர்ப்பிக்காததால் 1ம் பிரதிவாதிக்கு பட்டா வழங்குமாறு குறிப்பிடப்பட்டிருந்தது. 2ம் பிரதிவாதி உண்மை விவரங்களை மறைத்து, 1ம் பிரதிவாதிக்கு பட்டா வழங்குமாறு 3ம் பிரதிவாதிக்கு கடிதம் அனுப்பியிருந்தார். மனுதாரர், 22.12.2022ம் தேதியிட்டு 1ம் பிரதிவாதிக்கு பட்டா வழங்கும் விசாரணையை நிறுத்த கோரி 2,3 பிரதிவாதிகளுக்கு அறிவிப்பு அனுப்பினார். 2,3 பிரதிவாதிகள் 05.01.2023ம் தேதி மேற்படி அறிவிப்பை பெற்றுக்கொண்டு பதில் அனுப்பவில்லை.

(ஏ) 1ம் பிரதிவாதிக்கு, 3ம் பிரதிவாதி கொடுத்த பட்டா சட்டவிரோதமானது. அது இயற்கை விதிக்கு முரணானது. அது வாதியின் சட்டப்படியான உரிமையை கட்டுப்படுத்தாது. 1ம் பிரதிவாதி அரசியல் செல்வாக்கை பயன்படுத்தி 3ம் பிரதிவாதியிடமிருந்து சட்டவிரோதமாக பட்டா பெற்றுக்கொண்டதால் அது வாதியின் உரிமையை கட்டுப்படுத்தாது. அறிவிப்பை பெற்றுக்கொண்ட 4ம் பிரதிவாதி முறையான விசாரணை நடத்தி அறிக்கை

அனுப்புமாறு 2ம் பிரதிவாதிக்கு கடிதம் அனுப்பினார். ஆனால் 2,3 பிரதிவாதிகள், 1ம் பிரதிவாதியுடன் சேர்ந்துக்கொண்டு முறையான விசாரணை இல்லாமல் 1ம் பிரதிவாதிக்கு பட்டா அளித்துள்ளார். 28.02.2023ல் திருத்தணி வட்ட சார்அளவையரான 5ம் பிரதிவாதி வழக்கு சொத்திற்கு 1ம் பிரதிவாதியுடன் வந்து எந்த அறிவிப்பும் தராமல் அளவீடு செய்ய முயற்சித்தார். 5ம் பிரதிவாதியின் மேற்படி முயற்சியை மனுதாரர் கஷ்டப்பட்டு தடுத்துள்ளார்.

(ஏ) 03.03.2023ம் தேதி 1ம் பிரதிவாதி அவரது மனைவி, அவரது மகன் நவீன், பிரவீன்குமார் மற்றும் அடியாட்களுடன் மாலை 7.00 மணிக்கு வாதி இல்லாத போது வாதியின் வீட்டிற்கு வந்து புதிதாக திருமணமான மனுதாரரின் மூத்த மகன் ஜெகதீசன் மற்றும் அவரது மனைவி சீதாவை, 1ம் பிரதிவாதி தள்ளி கதவை முடிவிட்டார். மேலும் பெட்ரோல் ஊற்றி வீட்டை எரித்து விடுவேன் என மிரட்டியுள்ளார். அதன் பின்னிட்டு 1ம் பிரதிவாதி, மனுதாரர் கட்டிய ஓட்டு கூரைவீட்டையும் சேதம் ஏற்படுத்தியுள்ளார். மேற்படி மனுதாரரின் மகன் கத்தியதால் அருகிலுள்ளவர்கள் ஓடிவந்து 1ம் பிரதிவாதியின் சட்டவிரோதமான செயல்களை தடுத்து நிறுத்தி, தம்பதியரை திரும்ப வெளியே விட்டனர். 1ம் பிரதிவாதியும் அவரது குடும்பமும் அடியாட்களுடன் ஓடிவிட்டனர்.

(ஐ) மனுதாரரின் மருமகள் சீதா 04.03.2023ம் தேதியிட்டு திருத்தணி காவல்நிலையத்தில் புகார் கொடுத்தார். அதில் 03.03.2023ம் தேதியிட்ட சம்பவங்கள் பற்றி சொல்லப்பட்டுள்ளது. அதை பெற்றுக்கொண்ட காவல்துறையினர் CSR. எண்.458/2023 பதிவு செய்தனர். அனால் 1ம் பிரதிவாதி அவரது குடும்பத்தினருக்கு எதிராக எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. கிராம நத்தம் நிலத்தை யார் ஆக்கிரமிப்பு செய்கிறார்களோ அவருக்குதான் அது உரிமையானது ஆகும். அரசுக்கு அதில் எந்த உரிமையும் இல்லை. ஆக்கிரமிப்பு செய்த நபர்களுக்குதான் பட்டா வழங்கமுடியும். 1 முதல் 3 பிரதிவாதிகள் கூட்டுச் சேர்ந்து, 3ம் பிரதிவாதி 1ம் பிரதிவாதிக்கு பட்டா அளித்துள்ளார்.

(ஒ) மனுதாரரும் அவரது தகப்பனாரும் தொடர்ச்சியாக அனுபவித்து வந்து வீடு கட்டி வரி செலுத்தி மின்கட்டணம் செலுத்தி 75 வருடங்களுக்கு மேலாக அனுபவித்து வந்துள்ளனர். மனுதாரர் தொடர்ச்சியாக எதிரிடை அனுபவத்திலும் உள்ளார். எனவே மனுதாரர் வழக்கு சொத்தின் முழு உரிமையாளர் ஆவார். 1ம் பிரதிவாதி அவரது குடும்பம் அடியாட்களுடன் எந்த நேரத்திலும் வழக்கு சொத்திற்கு வந்து சட்ட விரோதமாக ஆக்கிரமிப்பு செய்ய இயலும். எனவே இந்த வழக்கை தாக்கல் செய்வதை தவிர வேறு வழியில்லை. இல்லாவிடில் மனுதாரருக்கு தாங்க இயலாத கஷ்டம் ஏற்படும். உயர்அதிகாரி என்பதால் 4ம் பிரதிவாதி தேவையான தரப்பினராக சேர்க்கப்பட்டுள்ளார்.

2. **<u>மறுப்புரையின் சுருக்கம்:–</u>**

(அ) 1 முதல் 14 பிராது பத்தியிலுள்ள விவரங்களில் குறிப்பாக ஒப்புக்கொள்ளப்பட்டவை தவிர மற்றவற்றை வாதியே நிரூபிக்க வேண்டும். புல எண்.32/21ல் 57 சதுர மீட்டர் 2021ல் ந.க.எண்.3408/2021/A1 தேதி

01.12.2022ன் படி 32 சதுர மீட்டர் புல எண்.32/21(a) ஆகவும், 27 சதுர மீட்டர் புல எண்.32/21(b) ஆகவும் உட்பிரிவு செய்யப்பட்டுள்ளது. 1ம் பிரதிவாதிக்கு புல எண்.32/21(b)ல் விஸ்தீரணம் 27 சதுர மீட்டருக்கு பட்டா எண்.417ல் கொடுக்கப்பட்டுள்ளது. இந்த வழக்கு 20.03.2023ம் தேதியிட்டு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அந்த காலக்கட்டத்தில் 32/21 என்று வழக்கு சொத்தே இல்லை. அது எண்.32/21(a), 32/21(b) ஆக உட்பிரிவு செய்யப்பட்டு விட்டது. 1ம் பிரதிவாதி புல எண்.32/21(b)க்கு முழுமையான உரிமையாளர் ஆவார்.

(ஆ) வாதியின் உரிமை குறித்து 4 வருடங்களுக்கு மேலாக வாதிக்கும் பிரதிவாதிக்கும் இடையே பிரச்சனை இருப்பதால் நிரந்தர உறுத்துக் கட்டளை பரிகாரம் மட்டும் கோரியுள்ள இந்த வழக்கு நிலைக்கத்தக்கதல்ல. கிழமேல் 27 சதுரமீட்டர் 1ம் பிரதிவாதி உரிமை கோருகிறார் என்ற விவரம் வாதிக்கு நன்கு தெரியும். இந்த வழக்கை 57 சதுர மீட்டருக்கு தனது உரிமை விளம்புகை கேட்டு வாதி தாக்கல் செய்திருக்க வேண்டும். 27 சதுர மீட்டர் காலி இடத்திற்கு பிரச்சனை இருப்பதால் வாதி தனது பட்டா நிலம் 30 சதுர மீட்டர் இடத்தையும் மற்றொரு 27 சதுர மீட்டர் இடத்தையும் காட்டியிருக்க வேண்டும். நான்கு எல்லைகள் காட்டாதது வாதியின் வழக்கிற்கு பலவீனம் ஆகும்.

(இ) பிராது பாரா 1ல் கூறியுள்ளவை முற்றிலும் தவறு. வாதியின் தகப்பனார் வேலாயுதம் 02.10.1947ம் தேதியிட்ட ஆவண எண்.2950/1947ல் கிரையம் பெற்ற சொத்துக்கும், வழக்கு சொத்துக்கும் எந்த தொடர்பும் இல்லை. பிராது பாரா 10ல் முழு சொத்தான 57 சதுர மீட்டரையும் ஆக்கிரமித்து வழக்கு சொத்தில் வீடு கட்டியிருப்பதாக கூறியிருப்பதும் சரியல்ல. பழைய புல எண்.32ல் மொத்தம் 57 சதுர மீட்டரில் வாதியின் தகப்பனார் மேற்கு பக்கம் 30 சதுர மீட்டர் நிலம் மட்டுமே ஆக்கிரமித்து வீடு கட்டி குடும்பத்துடன் வசித்து வந்தார். அதேசமயம் 1ம் பிரதிவாதியின் தாயாரின் தாயார் அம்மணியம்மாள் கிழக்கு பக்கம் 27 சதுர மீட்டர் நிலத்தை அதே கிராமத்திலுள்ள மற்றொரு சொத்துடன் சேர்த்து அனுபவித்து வந்தார்.

(ஈ) 1ம் பிரதிவாதியின் தாயார் பெயர் கண்ணம்மாள். கண்ணம்மாளின் இளைய சகோதரி செந்தாமரையம்மாள். அம்மணியம்மாள் 04.10.1974ம் தேதியிட்டு ஆவண எண்.26/1974ன் படி எழுதிய உயிலில் A அட்டவணைச் சொத்தை 1ம் பிரதிவாதிக்கு அவரது தாயார் கண்ணம்மாவை காப்பாளராக காண்பித்தும், B அட்டவணைச் சொத்தை செந்தாமரை அம்மாளுக்கும் கொடுக்கப்பட்டது. அதன்படி கிழமேல் 10 ½ அடி தென்வடல் 30 அடி அளவில் கிழக்கு பக்கம் அம்மணியம்மாவால் கொடுக்கப்பட்டது. மேற்படி கிழமேல் 10 ½ அடி தென்வடல் அடி அளவுள்ள காலி மனை இடம் வேலாயுதத்தின் காலி மனை இடத்திற்கு கிழக்கும், நாகரத்தினத்தின் வீட்டிற்கு மேற்கும், அம்மணியம்மாள் மாந்தோட்டத்திற்கு தெற்கும் உள்ளது. மேற்கு பக்கம் 30 சதுர மீட்டர் காலி இடத்தில் கழிப்பிடம் மற்றும் கால்நடைகளுக்காக விடப்பட்டுள்ளது.

(உ) அம்மணியம்மாள் 1975ல் இறந்த பின்பு உயில் நடைமுறைக்கு வந்து புலஎண்.32/19ல் 1ம் பிரதிவாதி கிழக்கு பக்கம் 27 சதுர மீட்டர் நிலத்தில் வீடு

கட்டி புலஎண்.32/21ல் கழிப்பிடம் கட்டியும், கால்நடைகளை கட்டியும் வைத்துள்ளார். புலஎண்.32/22 வாதி, பிரதிவாதிகள் அவரவர் சொத்துக்கு போகவுள்ள பொதுபாதை ஆகும். வரி ரசீதுகள், மின் கட்டண ரசீதுகள் ஆகியவை புலஎண்.32/20 ல் வாதியின் தகப்பனார் கட்டிய வீட்டிற்குரியவை ஆகும். பிராது பாரா 4 ல் சொல்லப்பட்டுள்ள பாகபிரிவினையில் வழக்கு சொத்துக்கள் வாதிக்கு கிடைத்தது என்பது பொய். 2004 ல் 3 ம் பிரதிவாதி வழக்கு சொத்துக்கு வாதியின் தாயார் காமாட்சியம்மாள் பெயரில் பட்டா வழங்கியுள்ளார் என்பது தவறு.

(ஊ) வாதியின் தாயார் காமாட்சியம்மாள் பெயருக்கு 57 சதுர மீட்டருக்கு பட்டா வந்தது என்பதை வாதியே நிரூபணம் செய்ய வேண்டும். பிராது பாரா 5,6 ல் கூறியுள்ளவை மறுக்கப்படுகிறது. வாதி அடிக்கடி பிரதிவாதியுடன் சண்டைபோட்டு புல எண்.32/21ல் ஆக்கிரமிப்பு செய்ய முயற்சித்தால் கிராம மக்கள் முன்னிலையில் 10.08.2016 ம் தேதியிட்டு வாதி அவரது மூத்த சகோதரர் லோகநாதன், கே.கே. மாணிக்கம், கே. சின்னய்யா, மகேந்திரா, குமார், பாபு ஆகியோர்கள் முன்னிலையில் சமாதானப் பேச்சுவார்த்தை நடந்தது. மேற்படி பேச்சுவார்த்தையில் வாதி புல எண்.32/21ல் 30 சதுர மீட்டர் உரிமையுடையவர் என்பதையும், 1ம் பிரதிவாதி 27 சதுர மீட்டர் உரிமையுடையவர் என்பதையும் ஒப்புக்கொண்டார். மேற்படி முடிவு 10.08.2016 ம் தேதியிட்டு ஆவணத்தில் எழுதப்பட்டு அதில் வாதியும், வாதியின் மூத்த சகோதரர் லோகநாதனும் கையெழுத்திட்டுள்ளனர். மேற்படி ஆவணத்தில் பஞ்சாயத்தாரும் கையெழுத்திட்டுள்ளனர். எனவே வாதி 30 சதுர மீட்டர் மட்டுமே பாத்தியம் உடையவர்.

(எ) பிராது பாரா 7 ல் கூறியுள்ளது பொய். 1ம் பிரதிவாதி மேற்கு பக்கம் 30 சதுர மீட்டர் நிலத்தை ஆக்கிரமிப்பு செய்ததாக கூறுவது பொய். 1ம் பிரதிவாதி, 3 ம் பிரதிவாதியிடம் கொடுத்த மனுவில் 5 ம் பிரதிவாதியை வழக்கு சொத்தை அளவீடு செய்து 30 சதுர மீட்டரை வாதிக்கு அளந்து கொடுக்க நில அளவையரை நியமிக்க கோரியிருந்தார். அதன்படியே வாதி, 1ம் பிரதிவாதி, கிராம நிர்வாக அதிகாரி மற்றும் சிலர் முன்னிலையில் 01.03.2023 ம் தேதியிட்டு புல எண்.32/21 அளவீடு செய்யப்பட்டது. நில அளவையரின் புலவரைபடத்தை 1ம் பிரதிவாதி, வாதிக்கு கொடுத்துள்ளார். நில அளவையர் 23.12.2021ம் தேதி அளந்ததாகவும், கல் நட்டதாகவும், 1ம் பிரதிவாதியும் அவரது மனைவியும், வாதியையும் அவரது மனைவியையும் தடுத்தாக கூறியிருப்பது பொய். வாதியின் மனைவி பொய்யான புகார் அளித்ததால் விசாரணை நடத்திய காவல்துறையினர் அது பொய் புகார் என முடிவு கண்டு வாதியையும், அவரது மனைவியையும் பொய் புகார் கொடுக்க வேண்டாம் என அறிவுரை கூறி திருப்பியுள்ளனர்.

(ஏ) பிராது பாரா 8 ல் கூறியுள்ளது மறுக்கப்படுகிறது. 3 ம் பிரதிவாதியிடம் காமாட்சியம்மாள் பெயரிலிருந்த 57 சதுர மீட்டருக்கான தொலைந்து போன பட்டாவின் நகல் கொடுக்க விண்ணப்பித்தாக கூறுவது முழுவதும் சரியல்ல. 1ம் பிரதிவாதி பல்வேறு சமயங்களில் 3 ம் பிரதிவாதியிடம் பட்டா கோரி விண்ணபித்தாக கூறியிருப்பது முழுவதும் சரியல்ல. சமாதானமாக இருந்த

காலங்களில் 3ம் பிரதிவாதி, வாதியின் தாயார் பெயருக்கு 30 சதுர மீட்டருக்கு பட்டா கொடுத்தாக கூறியுள்ளார். மேற்படி பட்டா 2004ல் தொலைந்துவிட்டதாக கூறுவது பொய். 3ம் பிரதிவாதியின் 31.10.2022ம் தேதியிட்ட பதில் அறிவிப்புக்கு வாதி ஆவணம் எதுவும் கொடுக்காததால் 1ம் பிரதிவாதியின் கோரிக்கையை பரிசீலனை செய்ய கூறியுள்ளார். அவ்வாறே 3ம் பிரதிவாதி மேற்படி கோரிக்கையை பரிசீலனை செய்து 1ம் பிரதிவாதிக்கு 27 சதுர மீட்டர் உட்பிரிவு செய்து பட்டா கொடுத்துள்ளார்.

(ஐ) வாதி மேற்படி விவரங்கள் தெரிந்திருந்தே வழக்கு சொத்தில் அக்கிரமாக உட்புகுந்து 1ம் பிரதிவாதியின் சொத்தில் அத்துமீறி நுழைந்துள்ளார். வாதி 27 சதுர மீட்டருக்கு சட்டவிரோதமாக ஆக்கிரமிப்பு செய்துள்ளார். எனவே இந்த பிரதிவாதி மேற்படி ஆக்கிரமிப்பை அகற்ற கேட்டதற்கு அதை செய்யாமல் இந்த பொய் வழக்கை தாக்கல் செய்துள்ளார். வாதி 30 சதுர மீட்டர் மட்டுமே பாத்தியம் உடையவர். 27 சதுர மீட்டர் 1ம் பிரதிவாதிக்கு பாத்தியமுடையது ஆகும். வாதி சுத்தமான கரங்களுடன் நீதிமன்றத்தை அணுகவில்லை. இந்த வழக்கு முறையாக மதிப்பீடு செய்யப்படவில்லை. வழக்கிற்கு கூறப்பட்டுள்ள வியாஜ்ஜியமூலம் தவறானது ஆகும். எனவே வழக்கை தள்ளுபடி செய்ய வேண்டும்.

4. <u>தீர்வுக்குரிய பிரச்சனை:–</u>

இம்மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய விசயம் என்னவெனில் இம்மனு அனுமதிக்கத்தக்கதா? இல்லையா? என்பதேயாகும்.

5. <u>தீர்வு:–</u>

இரு தரப்பும் கேட்கப்பட்டது. ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டது. வழக்கு சொத்து மனுதாரரின் பாத்திய அனுபவத்தில் இருப்பதாகவும், எதிர்மனுதாரர் தேவையற்று வழக்கு சொத்தில் வாதியின் அனுபவத்தை இடைஞ்சல் செய்வதாகவும், எனவே மனு சொத்தில் மனுதாரரரின் அனுபவத்தை இடைஞ்சல் செய்யக்கூடாது என இடைக்கால உறுத்துக் கட்டளை வழங்க கோரி வாதிடப்பட்டது. கற்றறிந்த எதிர்மனுதாரர் தரப்பில் வழக்கு தாக்கல் செய்வதற்கு 3 மாதங்கள் முன்பே வழக்கு சொத்து உட்பிரிவு செய்யப்பட்டு விட்டது என்றும், இந்த வழக்கு சொத்தில் பிராதில் சொல்லியுள்ள புல எண்ணே பூமியில் இல்லை என்றும், அது ஏற்கனவே உட்பிரிவு செய்யப்பட்டு விட்டது என்றும், எனவே மனுவை தள்ளுபடி செய்ய கோரி வாதிடப்பட்டது.

6. பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்துள்ள மறுப்புரையில் வழக்கு சொத்தில் வாதி அத்துமீறி நுழைந்து ஆக்கிரமித்து இருப்பதாக பிரதிவாதி தரப்பில் ஒப்புக்கொள்ளப்பட்டுள்ளது. வழக்கு சொத்து மனு தேதியில் மனுதாரரின் அனுபவத்தில் இருப்பதாக மனுதாரர் தரப்பில் கூறிப்பட்டுள்ளது. மனுதாரர் அத்துமீறி ஆக்கிரமிப்பு செய்துள்ளதாகவும், ஆக்கிரமிப்பை அகற்ற வேண்டுமென்றும் எதிர்மனுதாரர் தரப்பில் கூறப்பட்டுள்ளது. எனவே மேற்படி சங்கதிகளிலிருந்து வழக்கு சொத்தில் மனு தேதியில் மனுதாரர் அனுபவத்தில்

உள்ளார் என்ற கூற்று எதிர்மனுதாரர் தரப்பில் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது என்பதை அறிய முடிகிறது.

7. வழக்கு சொத்தான புல எண்.32/21ல் மொத்தம் 57 சதுர மீட்டர் நிலத்தை பொறுத்து இந்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேற்படி சொத்தை மனுதாரரின் தகப்பனார் கிரையம் வாங்கிய ஆவணம் ம.சா.ஆ.1 ஆகவும், அதன் தமிழ்மொழி பெயர்ப்பு ம.சா.ஆ.2 ஆகவும், மனுதாரரின் தகப்பனார் இறப்பு சான்று ம.சா.ஆ.3 ஆகவும், அ.வ.எண்.434/1991ன் வழக்கு பதிவேடு ம.சா.ஆ 4 ஆகவும் மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. வழக்கு சொத்து காலி இடம் என்பது இம்மனுவில் இருதரப்பிலும் ஒப்புக்கொள்ளப்பட்டுள்ளது. வழக்கு சொத்தின் பட்டா உட்பிரிவு செய்யப்பட்டுள்ளதை பொறுத்து பிரச்சனை எழுந்துள்ளது என்பது இவ்வழக்கின் இருதரப்பு ஆவணங்களிலிருந்தும் அறிய முடிகிறது.

8. ஏற்கனவே மனுதாரர் அனுபவத்தில் உள்ளார் என்பதை எதிர்மனுதாரர் தனது மறுப்புரையில் ஒப்புக்கொண்டுள்ள நிலையில் மனுதாரரை சட்ட விரோதமாக வெளியேற்றினால் மனுதாரருக்கு பெருத்த கஷ்ட நஷ்டம் ஏற்படும் என்ற மனுதாரரின் வாதம் ஏற்றுக்கொள்ளத்தக்கதாகவே உள்ளது என இந்நீதிமன்றம் கருதுகிறது. இவ்வழக்கின் சூழ்நிலையில் முதல்நிலை நோக்கும், சமநிலை நோக்கும் மனுதாரருக்கு சாதகமாக உள்ளது என்றே இந்நீதிமன்றம் கருதுகிறது. இம்மனுவின் சூழ்நிலைகளில் மனு சொத்தை அசல் வழக்கு முடியும்வரை மனுதாரர் கோரியபடி மனுதாரரின் அனுபவத்தை எதிர்மனுதாரர் இடைஞ்சல் செய்யக் கூடாது என்ற இடைக்கால உறுத்துக் கட்டளை பரிகாரம் மனுதாரருக்கு வழங்கி உத்தரவிடுவதே இம்மனுவின் சூழலில் உகந்தது என்று இந்த நீதிமன்றம் கருதுகிறது.

முடிவாக, மனுச் சொத்தில் மனுதாரரின் அமைதியான அனுபவத்தினை எதிர்மனுதாரர்/1ம் பிரதிவாதியோ அவர்வகையாட்களோ இவ்வழக்கு முடியும்வரை எவ்வித இடைஞ்சல் செய்யக் கூடாது என இடைக்கால உறுத்துக் கட்டளை பரிகாரம் மனுதாரருக்கு வழங்கி உத்தரவிடப்படுகிறது. அவரவர் செலவுத் தொகையை அவரவரே ஏற்றுக் கொள்ள வேண்டுமென உத்தரவிடப்படுகிறது.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு, இன்று 2025 ஆம் ஆண்டு ஜனவரி திங்கள் 7 ஆம் நாள் இந்நீதிமன்ற அவையறியப் பகரப்பட்டது.

Sd/-R.D. Gurulakahmi,
07.01.2025

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
திருத்தணி.

<u>மனுதாரர் தரப்பு சாட்சி:–</u> இல்லை

<u>மனுதாரர் தரப்பு சான்றாவணங்கள்:–</u>

| | | | |
|---|---|---|---|
| 1. | ம.த.சா.ஆ.1 | 02.10.1947 | கிரைய ஆவணம்– சான்றிட்ட நகல் (தெலுங்கு மொழியில் உள்ளது) |
| 2. | ம.த.சா.ஆ.2 | 02.10.1947 | ம.த.சா.ஆ.1 கிரைய ஆவணம்– தமிழ்மொழியாக்கம் |
| 3. | ம.த.சா.ஆ.3 | 05.03.2018 | வேலாயுதபண்டாரம் இறப்புச் சான்றிதழ் – நகல் |
| 4. | ம.த.சா.ஆ.4 | -- | அ.வ.எண்.434/1991 ன் வழக்கு பதிவேடு – நகல் |
| 5. | ம.த.சா.ஆ.5 | 13.12.2004 | வீட்டுமனை ஒப்படைப்பு உத்தரவு |
| 6. | ம.த.சா.ஆ.6 | 29.03.2006 | செட்டில்மெண்ட் ஆவணம் –இணையவழி நகல் |
| 7. | ம.த.சா.ஆ.7 | 15.06.1994 | கிரைய ஆவணம்– இணையவழி நகல் |
| 8. | ம.த.சா.ஆ.8 | 24.12.2021 | புகார் மனு – நகல் |
| 9. | ம.த.சா.ஆ.9 | 02.03.2022 | திருத்தணி வட்டாட்சியருக்கு அளித்த மனு |
| 10. | ம.த.சா.ஆ.10 | 21.03.2022 | திருவள்ளூர் மாவட்டாட்சியருக்கு அளித்த மனு |
| 11. | ம.த.சா.ஆ.11 | 16.06.2022 | புகார் மனு – நகல் |
| 12. | ம.த.சா.ஆ.12 | 20.06.2022 | அஞ்சல் ஒப்புதல் அட்டை |
| 13. | ம.த.சா.ஆ.13 | 18.06.2022 | அஞ்சல் ஒப்புதல் அட்டை |
| 14. | ம.த.சா.ஆ.14 | 20.06.2022 | அஞ்சல் ஒப்புதல் அட்டை |
| 15. | ம.த.சா.ஆ.15 | 20.06.2022 | அஞ்சல் ஒப்புதல் அட்டை |
| 16. | ம.த.சா.ஆ.16 | 20.06.2022 | அஞ்சல் ஒப்புதல் அட்டை |
| 17. | ம.த.சா.ஆ.17 | 31.10.2022 | வருவாய் கோட்ட அலுவலர் கடித ந.க.எண்.2689/2022/அ2– அசல் |
| 18. | ம.த.சா.ஆ.18 | 22.12.2022 | வழக்கறிஞர் அறிவிப்பு –நகல் |
| 19. | ம.த.சா.ஆ.19 | 05.01.2023 | அஞ்சல் ஒப்புதல் அட்டைகள் (2) |
| 20. | ம.த.சா.ஆ.20 | 10.02.2023 | மாவட்ட ஆட்சியர் அலுவலக கடித ந.க.எண்.5624/2023/ஆ1– நகல் |
| 21. | ம.த.சா.ஆ.21 | 04.03.2023 | புகார் மனு– நகல் |
| 22. | ம.த.சா.ஆ.22 | -- | மனு ரசீது – புகைப்பட நகல் |

| | | | |
|---|---|---|---|
| 23. | ம.த.சா.ஆ.23 | -- | வீட்டு வரி ரசீதுகள் (8) – நகல் |
| 24. | ம.த.சா.ஆ.24 | -- | மின்கட்டண ரசீது– நகல் |
| 25. | ம.த.சா.ஆ.25 | 02.06.2024 | காமாட்சியம்மாள் இறப்புச் சான்றிதழ்– இணையவழி பதிவிறக்கம் |
| 26. | ம.த.சா.ஆ.26 | 27.05.2023 | வாரிசு சான்றிதழ்– இணையவழி பதிவிறக்கம் |
| 27. | ம.த.சா.ஆ.27 | -- | புகைபடம் |

<u>எதிர்மனுதாரர் தரப்பு சாட்சி :–</u> இல்லை

| | | | |
|---|---|---|---|
| 1. | எ.ம.த.சா.ஆ.1 | 04.10.1974 | உயில்ஆவணம்– சான்றிட்ட நகல் |
| 2. | எ.ம.த.சா.ஆ.2 | 01.12.2022 | திருத்தணி வட்டாட்சியர் அவர்களின் செயல்முறைகள்– சான்றிட்ட நகல் |
| 3. | எ.ம.த.சா.ஆ.3 | 01.02.2023 | மனைவரிதோராயப்பட்டா – சான்றிட்ட நகல் |
| 4. | எ.ம.த.சா.ஆ.4 | 01.03.2023 | புலவரைபடம் – சான்றிட்ட நகல் |
| 5. | எ.ம.த.சா.ஆ.5 | -- | பஞ்சாயத்தார் முன்னிலையில் ஏற்பட்ட சமாதான உடன்படிக்கை – சான்றிட்ட நகல் |

<u>நீதிமன்ற சாட்சி மற்றும் சான்றாவணங்கள்:–</u> இல்லை

<u>சாட்சி தரப்பு சான்றாவணங்கள்:–</u> இல்லை

Sd/-R.D. Gurulakahmi,
07.01.2025
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
திருத்தணி.